MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 24.07.2019 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
| --- | --- | --- |
| 530 | **பொருள் எண்.1**<br><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு 8000 குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறாக ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1. SISCO Manufacturing and Engineering Industries — 4.92 %அதிகம்<br>2. Malar Engineering Industries Agency — 4.78 %அதிகம்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்பட்டியல் வழங்கிய Malar Engineering Industries Agency நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1.அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று வேலைஉத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 531 | **பொருள் எண்.2**<br>இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளுக்கு 6 மாதங்களுக்கு தேவையான பல்ப், சோக், உள்ளிட்ட மின் சாதனப்பொருட்கள் விநியோகம் செய்ய ரூ.5.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பொருட்களை விநியோகம் செய்யும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1. அனுமதிக்கலாம்.<br>2. தனிஅலுவலரின் முன்அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 532 | **பொருள் எண்.3**<br>பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகம் 01.01.2019 முதல் தடை செய்யப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு சட்டம் 12/2019 ன்படியும்., நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.44555/2013/பி3 நாள்.28.02.2019ன்படியும் பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பவர்களுக்கான அபராதத் தொகை துணை விதிகளின் மீது ஆட்சேபனை மற்றும் கருத்துக்கள் கோரும் வகையிலான செய்தித்தாள் விளம்பர அறிவிப்பு 08.06.2019 அன்று தமிழ்சுடர் நாளிதழில் செய்யப்பட்டமைக்கான விளம்பரக்கட்டணம் ரூ.12600/– ESS ESS Publication மதுரை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 533 | **பொருள் எண்.4**<br><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான எரிவாயு தகனமேடையில் தகனமேடை மற்றும் குடிநீர் வசதி அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறாக விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br><br>1. கே.பதுருனிஷா 2.06 %அதிகம்<br>2. எம்.லத்தீப் 0.80% குறைவு<br><br>வரப்பெற்ற விலைப்பட்டியலில் குறைந்த விலைப்பட்டியல் வழங்கியுள்ள எம்.லத்தீப் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1. அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2. தனிஅலுவலரின் முன்அனமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 534 | **பொருள் எண்.5**<br><br>இந்நகராட்சி 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை 01.07.2019 முதல் 31.12.2019 வரை பராமரிக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br><br>1. Swastik Traders 0.60% குறைவு<br>2. Techlite Engineering 1.80% அதிகம்<br>குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Swastik Traders நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 535 | **பொருள் எண்.6**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான 6 OCC மையங்கள் மற்றும் 1 MCC மையத்திற்கு Shredding மிஷின் விநியோகம் செய்யும் பணிக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1) Ram Agencies, Tiruppathur 0.90% குறைவு<br>2) Kathir Enterprices, Tiruppathur 1.80% அதிகம்<br>குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Ram Agencies, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 536 | **பொருள் எண்.7**<br><br>அரசாணை (நிலை) எண்.77 பள்ளிக் கல்வித்துறை நாள்.13.04.2015ன்படி அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளின் கழிப்பறைகள் மற்றும் வளாகம் தனியார் நிறுவன துப்புரவு பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே பணிபுரிந்து வரும் தனியார் நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 30.04.2019 உடன் முடிவடைந்து விட்டதால் 2019–20ம் கல்வியாண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1313246/– ற்கும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்திற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தினை கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br><br>(கோப்பு எண்.2020/2017/எச்1) | அனுமதிக்கப்பட்டது |
| 537 | **பொருள் எண்.8**<br><br>இந்நகராட்சி உரக்கிடங்கில் நகரில் உருவாகும் திடக்கழிவுகள் மக்கும், மக்காதவை என பிரிக்கப்பட்டு விற்பனைக்காகக்கூடிய கழிவுகள் தவிர இதர கழிவுகள் கொட்டப்பட்டு வருகிறது. இதே உரக்கிடங்கில் Bio mining பணியும், FSTP பணியும் நடைபெற்ற வருவதால் திடக்கழிவுகளை கொட்டுவதற்கு இடப்பற்றாக்குறை இருப்பதால் ஏற்கனவே கொட்டப்பட்டுள்ள கழிவுகளை ஒதுக்கி சமன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு உள்ளூர் ஜேசிபி இயந்திரம் மூலம் கழிவுகளை சமன்படுத்துவதற்கான நடவடிக்கையினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>கோப்பு எண்.914/2019/எச்1 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 538 | **பொருள் எண்.9**<br><br>இந்நகராட்சி மதுரை திருச்சி சாலையில் அமைந்துள்ள நகராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3000 W-Solar power plant with battery அமைக்கும் பணிக்கு ரூ.5.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 539 | **பொருள் எண்.10**<br><br>இந்நகராட்சி தெருவிளக்குகளுக்கு 01.07.2019 முதல் 31.12.2019 வரை தேவையான மின்சாதனங்கள் விநியோகிக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1. Swastik Traders, Madurai 0.49% குறைவு<br>2. Techlite Engineering, Madurai 1.27% அதிகம்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்பட்டியல் வழங்கியுள்ள Swastik Traders நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 540 | **பொருள் எண்.11**<br><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆரம்ப சுகாதார நிலையத்தில் Solar power paner அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1. Kevin vendors, Coimbatore 0.85% அதிகம்<br>2. Solar green power pvt ltd, Chennai 0.34% குறைவு<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்பட்டியல் வழங்கியுள்ள Solar green power pvt ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 541 | **பொருள் எண்.12**<br><br>மேலூர் நகராட்சி மில்கேட் பகுதியில் அமைந்துள்ள சமுதாயக் கூடத்தின் உரிமதாரர் திரு.ஆர்.இளங்கோ என்பவரால் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(MD).No.23724/2019 மீது வழங்கப்பட்ட 27.02.2019ம் தேதிய தீர்ப்பாணை தொடர்பாக நகராட்சியால் மேல்முறையீடு செய்வதற்கான நீதிமன்ற செலவினம் ரூ.5000/– மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/– அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன் முத்தையா அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2617/2018/அ2) | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 542 | **பொருள் எண்.13**<br><br>பொதுசுகாதாரப்பிரிவு வண்டி எண்.TN59 AZ 3449 டம்பர் பிளேசர்ஹைட்ராலிக் மோட்டார் பழுதானதால், பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஓட்டுநர் திரு.கோபாலகிருஷ்ணன் தனது சொந்தசெலவில் ஹைட்ராலிக் மோட்டார் புதிதாக வாங்கி பொருத்தியதற்கான செலவினம் ரூ.10000/– மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ.10000/– ஓட்டுநர் திரு.கோபாலகிருஷ்ணன் –க்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.1159/2019/எச்1 | அனுமதிக்கப்பட்டது |
| 543 | **பொருள் எண்.14**<br><br>பொதுசுகாதாரப்பிரிவில் அன்றாடம் பயன்படுத்தப்பட்டு வரும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றும் பிளீச்சிங் பவுடர் இருப்பு குறைவாக உள்ளது. தற்போது மழைபெய்து வருவதாலும், எதிர் வரும் காலம் மழைக்காலம் என்பதாலும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்காக கிருமிநாசினிகள் போதிய அளவில் இருப்பில் வைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே தேவையான கிருமிநாசினிகளை ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கிக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>நீர்த்த சுண்ணாம்புத்தூள் – 10000 கிலோ<br>பிளீச்சிங்பவுடர் – 2000 கிலோ<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.1458/2014/எச்1 | |
| 544 | **பொருள் எண்.15**<br><br>நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், மதுரை அவர்களின் ஈப்பு வாகனம் TN58CG0888க்குரிய பழுது நீக்க செலவினம் ரூ.28980/—ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 545 | **பொருள் எண்.16**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கொசுக்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்ட வரும் புகைமருந்து தெளிப்பான்கள் (Vehicle mounted and Pulse fog) 2012ல் வாங்கப்பட்டவைகளாகும். அவை அடிக்கடி பழுதடைந்து, பழுதுநீக்கம் செய்து பயன்படுத்தப்பட்டு வந்தன. தற்போது அவை மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளன. எனவே ஒரு எண்ணிக்கை மினி டீலக்ஸ் வாகனத்தின் மூலம் பயன்படுத்தக்கூடிய புகைமருந்து தெளிக்கக்கூடிய தெளிப்பான்கள் Pulse fog இரண்டு எண்ணிக்கையும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>பொதுசுகாதார நலன் கருதி மேற்படி புகைமருந்து தெளிப்பான்கள் வாங்கிக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.1456/2019/எச்1 | அனுமதிக்கப்பட்டது |
| 546 | **பொருள் எண்.17** | அனுமதிக்கப்பட்டது |

மேலூர் நகராட்சி பேருந்துநிலையத்தில் உள்ள உணவகத்தை திரு.ஆர்.பகீரதன் என்பவர் உரிமம் பெற்று நடத்தி வந்தார். அன்னார் நீண்ட காலமாக உணவகம் நடத்தி வருவதால் அன்னாரது உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விடக்கோரி திரு.ஏ.பி.இளங்கோ என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)No.23224/2018ன்படி வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் ஆணையாளரை 05.12.2018ல் நேரில் ஆஜராக தெரிவிக்கப்பட்டதின் பேரில் ஆணையர் நேரில் ஆஜரானதில் 06.12.2018 அன்று உணவகத்தை பூட்டி சாவியினை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டதன் பேரில் மேற்படி உணவகத்தை 06.12.2018 அன்று நகராட்சியால் பூட்டி கையகப்படுத்தப்பட்டது.

மேற்படி நீதிமன்றத்தின் 01.03.2019ம் தேதிய தீர்ப்பாணையில் 15.04.2019ம் தேதிக்குள் பொதுஏலம் நடத்த தெரிவிக்கப்பட்டது. அச்சமயம் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால் கால அவகாசம் வழங்கக் கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் W.P.(MD)No.6871/2019ன் 02.07.2019ம் தேதிய தீர்ப்பாணையில் 31.07.2019ம் தேதிக்குள் பொதுஏலம் நடத்தி அதன் விபரத்தினை 06.08.2019க்குள் நீதிமன்றத்தில் தெரிவிக்கக் கோரியதன்பேரில் 27.06.2019 அன்று பொது ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அன்றைய தினம் நிர்வாக காரணங்களால் பொதுஏலம் நடைபெறவில்லை. மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 16.07.2019 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் கீழ்க்கண்ட நபர்கள் பொதுஏலத்திலும், கீழ்க்கண்ட நபர்கள் ஒப்பந்தப்புள்ளியிலும் கலந்துகொண்டனர்.

**பொதுஏலத்தில் கலந்துகொண்டவர்கள்.**

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | கேள்வி தொகை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | S.A.A.பாஸ்கரன், த/பெ அரசப்பன்,<br>6, பாஸ்பாங்களா, காந்தி நகர் மெயின்ரோடு,மேலூர் | ரூ.21,800 |
| 2. | R.K.தமிழ்செல்வம், த/பெ ஆர்.காஞ்சிவனம்,<br>எச்1, குமார் நகர்,<br>மேலூர் | ரூ.21,600 |
| 3. | A.செல்வராஜ், த/பெ ஆண்டியப்பன்,<br>5/135, தீபன்ராஜ் இல்லம், | ரூ.21,900 |

| | | |
|---|---|---|
| | கீழவளவு (P.O) , மேலூர் | |
| 4. | M.K. பாலகிருஷ்ணன்,த/பெ கருப்பணன்,<br>வடக்குத்தெரு, சூரக்குண்டு,<br>மேலூர் | ரூ.21,700 |
| 5. | R. உதயக்குமார் த/பெ ராஜேந்திரன்<br>A.வள்ளாலப்பட்டி (P.O)<br>மேலூர் | ரூ.22,000 |
| 6. | M.கண்ணன், த/பெ முனிச்சாமி,<br>எம்.ஒத்தப்பட்டி,<br>கோட்ட நத்தம்பட்டி (P.O), மேலூர் (T.K) | ரூ.22,100 |

**ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள்.**

| **வ. எண்** | **பெயர் மற்றும் முகவரி** | **கேள்வி தொகை<br>(மாதம் ஒன்றுக்கு)** |
|---|---|---|
| 1. | T.திவாகர் த/பெ தமிழரசன்,<br>மல்லிகை நகர்<br>மேலூர் | ரூ.22,300 |
| 2. | A.இளவரசு த/பெ ஆண்டி<br>232, சண்முகவேல் நகர், மதுரை–காதக்கிணறு<br>அரும்பனூர். | ரூ.21,000 |

T. திவாகர் என்பவரது ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ.22,300/– உயர்த்தப்பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.22,100/– விட ரூ.200 கூடுதலாகவும், பழைய மாத வாடகை ரூ.21,500/–விட ரூ.800/– கூடுதலாகவும் இருப்பதால் திரு. T. திவாகர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பேருந்து நிலைய உணவகத்திற்கான உரிமத்தினை 01.08.2019 முதல் அரசாணையின்படி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15% வாடகை உயர்வு செய்யவும் ஒன்பதாண்டு முடிவில் சந்தை மதிப்பிலான வாடகை நிர்ணயம் செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் அன்னார் வசம் ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2768/2018/அ2) | |
| 547 | **பொருள் எண்.18**<br><br>2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920பிரிவு 306(28ஏ)ன் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள் மற்றும் தண்டங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண்.514 நாள்.13.06.2019ன்படி ஒப்புதல் பெறப்பட்டு விதிகளின்படி ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பொதுமக்களிடமிருந்து கோரப்பட்டதில் ஆட்சேபனைகளோ, ஆலோசனைகளோ வரப்பெறவில்லை. எனவே மேற்காணும் துணை விதிகள் மற்றும் தண்டத்தொகை நிர்ணயத்தை உறுதிசெய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. துணைவிதிகளை அரசிதழில் வெளியிடுவதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>அ) துணை விதிகளை மன்றம் உறுதிசெய்யலாம்.<br>ஆ) அரசிதழ் விளம்பர செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>( கோப்பு எண்.519/2017/எச்1) | அனுமதிக்கப்பட்டது |
| 548 | **பொருள் எண்.19**<br><br>திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்ட நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தினை தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள 10.07.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br>1) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி<br>2) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி<br>3) நகராட்சி உயர்நிலைப்பள்ளி , அழகர்கோவில் ரோடு | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
4) நகராட்சி துவக்கப்பள்ளி, கருத்தபுளியம்பட்டி<br>
5) நகராட்சி துவக்கப்பள்ளி, சிவன்கோவில் தெரு
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனம்</th><th>ஒரு பணியாளருக்கு/ நாள் ஒன்றுக்கு</th></tr>
<tr><td>1.</td><td>Jai shirdi sai Man power Agency, Madurai</td><td>ரூ 420/–</td></tr>
<tr><td>2.</td><td>Ever Green Man Power Agency, Madurai</td><td>ரூ 450/–</td></tr>
</table>
மேற்கானும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.<br>
அலுவலகக்குறிப்பு<br><br>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Jai shirdi sai Man power Agency,Madurai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
(கோப்பு எண்.2020/2017/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>549</td>
<td>
பொருள் எண்.20<br><br>
மேலூர் நகராட்சிக்கு சொந்தமான காந்திஜி பூங்கா ரோட்டில் அமைந்துள்ள வணிகவளாக கடைஎண்கள் 10,17,18,20,29,30,31 மற்றும் 32 ஆகிய எட்டு கடைகளும் நீண்ட நாட்களாக காலியாக உள்ளது. நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகையும் செலுத்தப்படாமல் நீண்ட நாட்களாக நிலுவையாக உள்ளது. மேற்படி கடைகளின் உரிமதாரர்களையும் கண்டறிய இயலவில்லை. எனவே இக்கடைகளின் கேட்பினை 01.04.2018 முதல் கணிணியிலிருந்து நீக்கம் செய்யவும், இக்கடைகளை பொதுஏலப்பட்டியலில் சேர்த்து ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக்குறிப்பு<br><br>
01.04.2018 முதல் கணிணியிலிருந்து நீக்கம் செய்யவும், இதனால் நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பைஇழப்பென கருதாமல் இருக்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | (ந.க.எண்.340/2018/அ2) | |